19.12.2017

தினமலர்

## மானிய உரத்திற்கு 'ஆதார்' ஜன.1 முதல் அவசியம்

திண்டுக்கல்: 'ஜன.1 முதல் விவசாயிகள் மானிய விலையில் உரம் வாங்க ஆதார் கார்டு அவசியம்' என, வேளாண்மை துறை அறிவித்துள்ளது.விதைகள், இடுபொருள்கள், உரம், டிராக்டர்,

இயந்திரங்கள் உள்ளிட்டவற்றுக்கு மத்திய, மாநில அரசுகள் குறிப்பிட்ட தொகையை மானியமாக வழங்கு கின்றன.உரங்களுக்கு 80 முதல் 90 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

இந்த மானியம் நேரடியாக உரம் தயாரிப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்படும். சில உர விற்பனையாளர்கள் போலியான உரத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதிக விலைக்கு விற்கின்றனர்.

இதை தடுக்க கூட்டுறவு மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களுக்கு 'பாயின்ட் ஆப்சேல்' கருவி வழங்கப்பட்டுள்ளது.அந்த கருவியில் உரம் வாங்க செல்லும் விவசாயிகள் ஆதார் எண் மற்றும் கை விரல் ரேகையை பதிவு செய்த பின்னரே, உரம் வாங்க முடியும். இதன்

மூலம் விவசாயிகள் அல்லாதோர் பிற தேவைகளுக்கு உரம் வாங்குவது தடுக்கப்படும்.இத்திட்டத்தை முழுமையாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, ஜன.1 முதல் மானிய விலையில் உரம் வாங்க விவசாயிகளுக்கு ஆதார் கார்டு அவசியம்.

இனி சாதாரண நடைமுறையில் உரம் வாங்க இயலாது. ஆதார் கார்டு உரம் வாங்க செல்பவரின் கார்டாக இருந்தால் மட்டுமே உரம் வழங்கப்படும். கலப்பு உரம், உயிர் உரம் மற்றும் நுண்ணுாட்ட உரங்களுக்கு மானியம் கிடையாது, என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தோட்டக்கலை ஆராய்ச்சியில் தமிழகத்திற்கு முக்கியத்துவம்

தமிழகத்தில், தோட்டக்கலை ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்ள, மத்திய அரசு முக்கியத்

துவம் அளித்துள்ளதுதமிழகத்தில்., சென்னை, திருச்சி, கோவை உட்பட, நாடு

முழுவதும், 103 இடங்களில், மத்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றனஇவற்றில் ., 43 மையங்களை மூட, மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியானதுஅதில்., தமிழகத்தில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களும் உள்ளதாக குற்றம் சாட்டி வந்தனர்ஆனால் ., இங்கு புதிய ஆராய்ச்சிகள்மேற்கொள்ள, மத்திய அரசு நிதி உதவி வழங்கி உள்ளது.

இது குறித்து, தோட்டக்கலைத்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவதுஉலகில்:, தோட்டக்கலை பொருட்கள் உற்பத்தியில், முதல் இடத்தைப் பிடிக்கும் வகையில், மத்திய அரசு பல முயற்சிகளை எடுத்து வருகிறதுஇதன் ஒரு பகுதியாக ., தமிழகம், ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட, எட்டு மாநிலங்களில், 10 மத்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்களில், பழங்கள் உற்பத்தி தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளனஇதற்காக., 23 கோடி ரூபாயை, மத்திய அரசு ஒதுக்கி உள்ளதுஇதனால் ., வரும் காலங்களில், நாட்டில் பழங்கள் உற்பத்தி அதிகரிக்கும், என்றார்.

- நமது நிருபர் –

தி இந்து
தமிழால் இணைவோம்

## அந்தமான் அருகே புதிய காற்றழுத்த தாழ்வுநிலை: சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

அந்தமான் அருகே புதிய காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகியுள்ளது. இதன் தாக்கத்தால் தமிழகத்துக்கு மழை கிடைக்க வாய்ப்பில்லை என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவ காலம் நிலவினாலும், கடந்த 10 நாட்களாக வங்கக் கடல், அரபிக் கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு நிலையோ, காற்றழுத்த தாழ்வு பகுதியோ உருவாகவில்லை. அதனால் தமிழகம், புதுச்சேரியில் குறிப்பிடும்படியாக மழைப் பொழிவு இல்லை. இந்நிலையில், அந்தமான் அருகே புதிய காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகியுள்ளது.



இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது:

தற்போது வடகிழக்கு மற்றும் கிழக்கு பகுதியில் இருந்து குளிர்ந்த கடல் காற்று நிலத்தை நோக்கி வீசி வருகிறது. அதனால் மழை மேகங்கள் உருவாவது தடைபட்டு, மழை வாய்ப்புகள் குறைந்துள்ளன. இந்நிலையில், தெற்கு அந்தமான் மற்றும் அதை ஒட்டியுள்ள பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் தாக்கத்தால் இப்போதைக்கு தமிழகத்துக்கு மழை கிடைக்க வாய்ப்பில்லை. அந்த காற்றழுத்த தாழ்வுநிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அடுத்து வரும் 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சென்னையில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.